திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அய்யூர், தெற்கு நத்தத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. எனவே, அங்கே படிக்கின்ற சிறு பிள்ளைகள் நடந்து செல்வதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே தெற்கு நத்தத்தில் சத்துணவு மையம் ஒன்று அமைத்துத் தருவதற்கு இந்த நிதியாண்டிலாவது அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை இந்த அவையின் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வானதிராயன்பட்டணம் என்ற இடத்தில் *1-11-1993* முதல் ஒரு சத்துணவு மையம் இயங்கி வருகிறது. அதற்குப் பக்கத்திலேதான் இந்த தெற்கு நத்தம் என்கின்ற குக்கிராமம் இருக்கிறது. ஒரு சத்துணவு மையம் இயங்க வேண்டுமென்றால் ஆயிரம் பேர் கொண்ட ஜனத்தொகை அந்த கிராமத்தில் இருக்க வேண்டும். வானதிராயன்பட்டணத்தில் *1443* பேர் இருக்கிறார்கள். ஆனால் தெற்கு நத்தத்தில் *696* பேர் தான் இருக்கிறார்கள். ஆனாலும் அங்கே குழந்தைகள் எண்ணிக்கை *80* இருக்கிறது. *50* குழந்தைகளுக்கு மேல் இருந்தால் சத்துணவு கொடுக்கலாம் என்கின்ற அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அது யாருடைய தொகுதி என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் அதற்கு விதிவிலக்கு அளித்து அங்கேயும் சத்துணவு மையம் துவங்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்த ஆண்டு துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *54*, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

54—

சென்னை, கிண்டி சிறுவர் பூங்காவை மேம்படுத்துதல்.

***19786—திரு. எம். கே. பாலன்:**

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, கிண்டி சிறுவர் பூங்காவில் பார்வையாளர்களைக் கவருகின்ற வகையில் வன விலங்குகள், பறவைகள் ஆகியவைகளை கூடுதலாக்கி, அந்த வன விலங்குகள், பறவைகளைப் பராமரிக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

1994 நவம்பர் *8*]

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பார்வையாளர்கள் மற்றும் சிறுவர்களைக் கவரும் வகையில் காலியாக உள்ள கூண்டுகளில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிடமிருந்து விலங்குகள், பறவைகள் மாற்றம் செய்யப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. சென்னை, கிண்டி சிறுவர் பூங்காவில் பறவைகள், விலங்குகள் ஆகியவற்றை மேலும் கூடுதலாக்க போதிய இடவசதி இல்லை. தண்ணீர்ப் பற்றாக்குறையும் ஒரு முக்கிய காரணமாக உள்ளது. எனவே, இருப்பதை சிறப்பாகச் செய்வது என இந்த அரசு எண்ணம் கொண்டுள்ளது.

முற்பகல் *10-50*

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிண்டி சிறுவர் பூங்காவிலே ஆண்டுதோறும் அதிக அளவிலே வருமானம் வந்து கொண்டிருக்கிறது. ஆகையால் கூடுதலாக மிருகங்களையும் பறவைகளையும் அங்கே கொண்டுவந்து சிறுவர்களைக் கவருகின்ற வகையிலே பல்வேறு விதமான பறவைகளையும் மிருகங்களையும் வைத்துப் பராமரித்தால் இன்னும் கூடுதலாக வருமானம் வரும் என்பதால் அதற்கு வேண்டிய அளவுக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே பறவைகள், விலங்குகள் மற்றும் ஊர்வன இனத்தைச் சேர்ந்த விலங்குகள் என *300*–க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பூங்கா *8* ஹெக்டேர் பரப்பளவுதான் இருக்கிறது. எனவே அதற்கு மேல் அதை விரிவுபடுத்த வசதியில்லை. மேலும் தண்ணீர்ப் பற்றாக்குறை முக்கியமாக உள்ளது. தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்தால் பராமரிப்பு நன்றாக அமையாது. இருப்பினும் அந்தப் பகுதியில், நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இருந்து மாற்றம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இன்று கூட அங்கே புதிதாக வந்திருக்கிற பறவை இனத்தைப் பற்றி 'இந்து' பத்திரிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *55*, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.